



# நகர் ஊரமைப்பு துறை (DTCP) ஈரோடு மாவட்டம்

## கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம்

## குள்ளம்பாளையம் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், குள்ளம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்:206/9C - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு: 1அங்குலம் = 33அடி (1 : 400)

வ

இணையவழி விண்ணப்பம் எண்.AEKK6ZEB , நாள்.09.10.2024

**குறிப்பு:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : 0.89 ஏக்கர் (அ) 3620.0 ச.மீ | |
| ஒதுக்கிய மனைகள் | : 12 | |
| மனைப்பிரிவின் எல்லை | | ———— |
| மனைப்பிரிவு சாலை | | ———— |
| நிலையிலுள்ள சாலை | | ———— |

பூங்கா ஒதுக்கீட்டிற்கான பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) × 10%

: (3620.00 ச.மீ - 1155.75 ச.மீ) x 10% = 246.43 ச.மீ

பூங்கா : 246.43 ச.மீ (10.00%) மனுதாரரால் வழிகாட்டு மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

**பொது ஒதுக்கீடு :**

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:**

1. மனைப்பிரிவு சாலை : 1155.75 ச.மீ
2. பொது உபயோகம் (A) : 35.10 ச.மீ (1.42%)
   சாலை மற்றும் பொது உபயோகம் பரப்பு தான ஆவணம்.2458/2024, நாள்.24.10.2024 - ல் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**TANGEDCO - விற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:**

3. பொது உபயோகம் (B) : 28.50 ச.மீ (1.16%)
   TANGEDCO பரப்பு தான ஆவணம்.2459/2024, நாள்.24.10.2024 - ல் TANGEDCO-க்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**கட்டிட வரம்பு :**

9.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ விடப்படல் வேண்டும்.
9.0 மீ - க்கு மேல் 12.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்.

**மூலை முடக்கு :**

12.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 x 1.5 மீ விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண்: 18 ந.நி(ம) கு.வ. துறை(MA-1) நாள்: 04.02.2019 ன் படி மனைப்பிரிவில் அமையும் சாலை, பொது உபயோகம் (ம) பூங்கா ஒதுக்கீட்டினை உள்ளாட்சி தானமாகப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மின் பகிர்மானம் பகுதியினை TANGEDCO-விற்கு தானப்பத்திரம் வாயிலாக மனுதாரர்கள் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
2. அரசாணை எண்: 181 வீ.வ (ம) ந.வ.து நாள்: 09.12.2020 - ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்கு ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்: 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 16.07.2022 - ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், தலைவர், குள்ளம்பாளையம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்றும் அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வானையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு தலைவர், குள்ளம்பாளையம் ஊராட்சி அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
9. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று சரிபார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்தாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் பிரித்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
10. பிரஸ்தாப மனைப்பிரிவிற்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
11. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கல்ல.
12. மனைப்பிரிவினை சுற்றி மனுதாரரால் சுற்றுச்சுவர் (Compound Wall) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
13. மனைப்பிரிவில் ஊடே நீர்நிலை அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் மனைப்பிரிவு அமைக்கப்படல் வேண்டும். இதனை உள்ளாட்சி உறுதி செய்தல் வேண்டும்.
14. மனைப்பிரிவின் ஊடே செல்லும் உயர்மின் அழுத்தக்கம்பிப்பாதையினை சாலை போக்கிற்கு ஏற்றவாறு மனுதாரரால் தனது சொந்த செலவில் மாற்றி அமைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.
15. மயானம் பூமியிலிருந்து 30.0மீ சுற்றளவிற்குள் ஆழ்துளை கிணறு ஏதும் அமைக்க கூடாது அதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளப்பட வேணடும்.
16. மனைப்பிரிவின் மனைகள் RERA ஒப்புதல் பெற்ற பின்னரே விற்பனை செய்யப்படல் வேண்டும்.

SWP / DTCP / ERODE / LAYOUT NO:314/ 2024

| | |
|---|---|
| | ஜஸ்வரி |
| வரைவாளர் நிலை - III | கா.வேல்முருகன் |
| மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை - II | கோ.கண்ணன் |

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Erode
Date:2024.11.04 12:41:07

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்